RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s123

OPEN ACCESS

# மானிடவியல் நோக்கில் தொல்குடிச் சமூக உற்பத்தியும் அதன் படிமலர்ச்சியும்

செ. ஞானேஸ்வரன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசுக்கல்லூரி, மூணார், கேரளா-685612, இந்தியா.

# Anthropological perspectives in Primitive Social Production and Evolution

S. Gnaneswaran [a, *]

[a] Department of Tamil, Government College, Munar, Kerala–685612, India.

* Corresponding Author: gnaneswaran11@gmail.com

Received: 02-06-2021
Revised: 20-01-2022
Accepted: 29-01-2022
Published: 25-02-2022

Check for updates

**ABSTRACT**

The work refers to the socio-agricultural system of the Sangam period. In the Thinai community, the Kurinjinila community initially involved in hunting. These ancient tribes who lived as hunters are socially classified as vettuvar, kanavar and kuravar. Kanavar community is the forerunner of deforesting the forest for agricultural purposes the Kuravans also farmed here. They set up locations according to the nature of the situation. In the hilly and mountainous area, they have used the land for agriculture by burning the bushes under the trees. They stirred the soil with tools like ‘thondukali’ and ‘thular’ and sowed seeds. ‘Thondukali’ was the first agricultural tool to appear here and it was first used by women. Bhagavatsala Bharathi mentions that the woman was the first farmer. The land thus created is called ‘thinaipunam’ and both the man and the woman have harvested the crop in ‘thinaipunam’ safely. The harvested crop is stored for reproduction. They offered it to their Gods and later they cooked and ate them. They involved in bartering in exchange for their forest products. This study explains how the Kurinji land community evolved from the hunting community into the food producer, bartering and collector of foods.

**Keywords:** Primitive Social, Slash and Burn Agriculture, Diggingstick, Dry Land Crops, Food Collection, Bartering and Evolution, Raw Meat.

## முன்னுரை

ஆதிகாலத் தமிழ்ச் சமூகத்தில் நானிலச் சமூக அமைப்பு ஏக காலத்தில் நிலவியிருந்தமைக்குச் சங்க இலக்கியப் பதிவுகள் சான்றாக அமைகின்றன. இந்நிலப் பகுப்புகளுள் இனக்குழுச் சமூகமும் நிலவுடைமைச் சமூகமும் நிலவியிருந்தன. இனக்குழுச் சமூக வாழ்வியலை குறிஞ்சி மற்றும் முல்லை நிலச் சூழல்கள் காட்டுகின்றன. சமூக வாழ்வியலில் மனிதனின் அடிப்படை ஆதாரம் உணவு. இவ்வுணவை நில இயல்பிற்கேற்ப அக்கால மக்கள் உற்பத்தி செய்துள்ளனர். இவ்வுற்பத்தியின் தொடக்கம் குறிஞ்சி நிலத் தொல்குடிச் சமூகத்தில் பரிணமித்துள்ளது. சமதளமற்ற மலையும் மலை சார்ந்த பகுதியில் உற்பத்தி முறை சாத்தியமானது என்பதை அக்கால மக்களின் அறிவு நுட்பத்தின் வழி காணமுடிகிறது. குறிஞ்சி நிலப்பகுதி உணவு உற்பத்தியில் வேளாண்மைத் தொழிலின் தொடக்கமாக இருந்தமைக்குச் சான்றுகள் சங்கப்பாடல்களில் விரவிக்கிடக்கின்றன. சங்க இலக்கியம் பரந்துபட்ட களத்தை உடையது. இவற்றுள் குறுந்தொகை என்ற பிரதியில் உள்ள குறிஞ்சித் திணை பாடுபொருளில் அமைந்த பாடல்களை அடிப்படையாக கொண்டு இங்கு ஆராயப்படுகிறது (Aravendan, 2016).

## தொல்குடிச் சமூகம்

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் மலையும் மலை சார்ந்த பகுதியே தொல்குடிச் சமூக வாழ்வியலைக் காட்டுகின்றது. இச்சமூகத்தை நிலச்சூழலில் குறிஞ்சி என்று குறித்தனர். "இலக்கிய மரபில் குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த பகுதியுமாகும். புவியியல் - நிலவியல் கூற்றுப்படி மலை என்பது தனியாக நிற்காது. மலையில் சிறு புதர்க்காடுகள் தொடங்கி நன்கு வளர்ந்த காட்டு மரங்கள் வரை இருக்கும். சங்க இலக்கியம் குறிப்பிடும் மலைகள் அனைத்துமே கிழக்குத் தொடர்ச்சி மலைகளும், மேற்குத்தொடர்ச்சி மலைகளும் ஆகும். தனி மலைகளாக அமைந்தவை மிகச் சில மட்டுமே" (Bhakthavatsala Bharathi, 2020).

மலை சார்ந்த பகுதியான குறிஞ்சி நிலத்தில் வேட்டுவர், கானவர், குறவர், குறத்தி, கொடிச்சி என்றழைக்கப்பட்ட மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களுள் குறிஞ்சிநில சமூகத்தில் தொன்மையானவர்கள் வேட்டுவர்கள் ஆவர். ஆதிச் சமூகச் சூழலில் வேட்டையில் மட்டும் ஈடுபட்டு உணவு ஈட்டியுள்ளனர். "வேட்டைக்குச் சென்ற வேட்டுவர்கள் காட்டில் கிடைத்த விலங்கின் இறைச்சியைப் பச்சையாகவே (பச்சூன்) உண்ட ஒரு நிலையும், வேட்டையில் கொன்று உடன் உண்ணும் அவசர நிலையும் 'உணவு தேடி நகரும் சமூகம்' இருந்ததற்கான எச்சங்களைக் காட்டும் சான்றுகளாகும். (அகம். 59, 97, 129, 159, 309)" என்பர் (Bhakthavatsala Bharathi, 2020) இவ்வேட்டுவர்களை அடுத்து குறிஞ்சி நிலச் சமூகத்தில் பரவலாக இருப்பவர்கள் கானவர் மற்றும் குறவர் குடியினரும் ஆவர். கானவர்கள் வேட்டைத் தொழில் செய்வதோடு மட்டுமல்லாது வேளாண்மைத் தொழில் நோக்கியும் நகர்ந்துள்ளனர். "சங்க இலக்கியங்களை ஆழ்ந்து கவனிக்கும்போது வேட்டுவர் பெரிதும் வேட்டைத் தொழிலைச் சார்ந்தவராகவே காட்டப்பட்டுள்ளனர். குன்றக் குறவர், கானக் குறவர், கானவன் முதலானவர்கள் வேட்டையோடு சேகரித்தலையும் வன்புல வேளாண்மையையும் செய்ததைக் காண முடிகிறது" (Bhakthavatsala Bharathi, 2020). கானவர் வில்லை ஏந்தி வேட்டைத் தொழில் செய்தமையை

சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇக்

என்ற பாடல் வரியின் மூலம் அறியமுடிகிறது (Aravendan, 2016). வேட்டைத் தொழிலின் முதன்மைக் கருவிகளாக வில், அம்பு பயன்பட்டன. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் அம்மலை நிலத்தில் கிடைத்த இயற்கைப் பொருளைக் கொண்டு இருப்பிடத்தை அமைத்தனர் என்பதை,

கொன்னிலைக் குரம்பையி னிழிதரும்

இன்னா திருந்தவிச் சிறுகுடி யோரே

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). பயனற்ற இலையால் இச்சிறுகுடியினர் உருவாக்கிய குடிசைகள் குரம்பை என்று அழைக்கப்பட்டன. மலைகளில் வாழ்வைத் தொடங்கிய இம்மக்கள் அங்கு கிடைக்கும் இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்திக் கொண்டனர். "குறிஞ்சித் திணைக் குறவர்கள் தம் குரம்பைகளை நீர் வசதி உள்ள இடத்தில், காற்றோட்டம் உள்ள பகுதியில் அமைத்து, அவற்றைச் சுற்றி வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி, அவற்றில் செடி கொடிகளை வளர்த்தார்கள் என்கிறது அகநானூறு (272: 7 -11)" (Bhakthavatsala Bharathi, 2020). "இப்படியாகக் குறிஞ்சி முழுவதும் மலைகளில் வாழ்வதற்கெனக் கட்டப்பட்ட குரம்பை வீடுகள் சிதறிக் காணப்பட்டன (ஐங்.252). இத்தகைய 'சிதறிய குடியிருப்பு' (Scattered Settlement) முறையை இன்றுங்கூட இமயமலையின் அடிவாரம் தொடங்கி மகாராட்டிரத்தின் சாத்புரா மலைகள் ஊடாக, மேற்குத் தொடர்ச்சி மலை வந்து முடியும் தமிழகம் வரை வாழும் குறிஞ்சி நிலப் பூர்வ பழங்குடிகளிடம் காணலாம்" (Bhakthavatsala Bharathi, 2020). மலைகளின் மேலேயும், காட்டுப் பகுதிகளிலும் தங்களது குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். குறவர்களின் குடியிருப்புக் கூரையால் வேயப்பட்டு மலைகளின் மேற்புறத்தில் தோற்றமளித்தன. அதனைக் குறிச்சி என்றழைத்தனர். இவர்கள் தங்கிய ஊரினை சிறுகுடி என்றழைத்தனர் என அறிய முடிகிறது. இவ்வூரிற்கு அங்குள்ள காந்தள் மலர்ச் செடிகளே வேலியாக அமைந்துள்ளன. இதனை

பசுமரல் கடுக்குங்

காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). இத்தகைய சிறுகுடில்களில் வாழும் குறமகள் கள்ளுண்டு மகிழ்வாள். அவள் பெற்ற சிறாருடன் யானைக் கன்றுகள் வந்து விளையாடி மகிழும் என்பதை

முழந்தா ளிரும்பிடிக் கயந்தலைக் குழவி

நறமலி பாக்கத்துக் குறமகளீன்ற

குறியிறைப் புதல்வரொடு மறுவந்தோடிக்

கூரை முற்றுஞ் சார னாடன்.

என்னும் பாடல்வரிகள் விளக்குகின்றன (Aravendan, 2016). இயற்கைச் சார்ந்த சூழலில் தங்கள் இருப்பிடத்தை உருவாக்கி வாழ்ந்த குறிஞ்சிநிலச் சமூகத்தினர் தங்களுக்கான உணவு உற்பத்தி முறையிலும் ஈடுபட்டுள்ளனர். "இடம்பெயரும் வேளாண்மையை மேற்கொள்ளும் இவர்கள் எளிதில் மாற்றிக் கொள்ளத் தக்க வீடுகளையே கட்டுகின்றனர். கோண்டு மக்களின் வீடுகள், மரம், மூங்கில் மற்றும் புற்களினால் கட்டப்படுகின்றன. இவர்களின் வீடுகள் சில கூட்டமாகவும், சில தனித்தும் காணப்படுகின்றன" (Murugan, 2003). குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் சூழல் இன்றைய பழங்குடி மக்களிடத்து நிலவி வருகின்றன என்பதை காண முடிகிறது.

குறிஞ்சி நிலம் சுற்றுச்சூழல் இயற்கை வளம் நிறைந்துக் காணக்கூடிய மலைப்பகுதி ஆகும். இவ்வகை சூழலில் வாழ தலைப்பட்ட மனிதன் தொடக்கத்தில் விலங்குகளை வேட்டையாடினான். பின்பு அவ்விலங்குகளை தன் உதவிக்கு பழக்கினான். இங்குதான் தொடக்க கால நாகரிகம் தொடங்கி இருக்கவேண்டும். ஏனென்றால் மக்கள் நாடோடி வாழ்க்கையை விலங்குகளோடு ஒன்றிணைந்து வாழ்ந்துள்ளனர். இதன் படிமலர்ச்சியிலிருந்து வளர்ச்சியுற்று இனக்குழு வாழ்க்கைக்கு மாறி பின்பு வாழத் தொடங்கியது குறிஞ்சி நிலமாகும். வாழும் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாத தன்மையில் மனிதன் உணவு ஈட்ட முயற்சித்தான். "கி.மு.10,000 ஆண்டுகளுக்கு முன்னர் வரை வேட்டையாடுதலும், இயற்கையில் கிடைக்கும் உணவுப் பொருள்களைச் சேகரித்தலுமே முதன்மையான வாழ்க்கைத் தொழிலாக இருந்தது. கி.மு.7000 ஆண்டுவாக்கில் வடக்கு ஆப்பிரிக்கா, சிற்றாசியா, தெற்காசியா போன்ற பழைய உலகப்பகுதிகளிலும் புத்துலகத்தைச் சேர்ந்த பாலைவன மக்களும், புத்துலகப் பகுதியில் வாழ்ந்த தொன்மைப் பண்பாட்டினரும் கால்நடைகளை மேய்த்து வாழத் தொடங்கினர். கி.மு.3000 ஆண்டுவாக்கில் உலகின் பெரும்பாலானவர்கள் வேளாண்மையை முதன்மையான வாழ்க்கைத் தொழிலாக ஏற்கத் தொடங்கினர். இதன் அடிப்படையில் மானிடவியலாளர்கள் மனித இனத்தினை நான்கு நிலைகளில் பகுத்துக் கொண்டனர்.

வேட்டையாடி உணவு சேகரித்தல்

கால்நடைகளை வளர்த்தல்

எளிய வேளாண்முறை (உழுது பயிரிடும் முறைக்கு முந்திய வேளாண்மை, காட்டெரிப்பு வேளாண்மை தோண்டுகழி கொண்டு விதைத்தல் ஆகியன)

பண்பட்ட வேளாண்மை (உழுதல் வேளாண்மை) என்பர்" (Bhakthavatsala Bharathi, 2005). இம்முறையே பழந்தமிழ்ச்சமூகம் வேளாண்முறையில் குறிஞ்சி, முல்லை, மருதம் என்று படிநிலைச் சமூகமாக காணப்படினும் குறிஞ்சி நிலத்தில் வேட்டைச் சமூக வாழ்வியலோடு எளிய வேளாண்முறை நிகழ்ந்தமைக்கு சங்கப் பாடல்கள் சான்றுகளாக உள்ளன. குறிப்பாக காட்டெரிப்பு வேளாண்மையும் தோண்டுகழி மூலம் விதைத்தலும் குறிஞ்சி நிலத்தில் நிகழ்ந்துள்ளமையை குறிஞ்சி நில பதிவுகள் கூறுகின்றன. "பண்டைத் தமிழகத்தில் கானவர் முதன்முதலாகக் காட்டெரிப்பு வேளாண்மையை மேற்கொண்டனர். பண்டைய வேட்டைத் தொழிலையும் தக்க வைத்துக் கொண்டனர். தமிழ்ச்சமூகத்தில் படிமலர்ச்சியில் வேட்டுவர் சமூகத்திலிருந்து கானவர் சமூகம் பெருமளவு மாற்றம் பெற்ற ஒரு சமூகமாகும். வேட்டையும் சேகரித்தலும் மட்டுமே வாழ்வாதாரம் என்ற நிலையை மாற்றியவர்கள் கானவர். இவர்கள் காடுகளில் முதன்முதலாக வன்புல வேளாண்மையைத் தொடங்கினார்கள்.

மலைகளில் கற்கள் நிறைந்த பகுதியும் மரங்கள் அடர்ந்த காட்டுப்பகுதியும் இருக்கும். மிச்சமிருந்த பகுதியில் புதர்களை அகற்றி எரிபுன விவசாயத்தைத் தொடங்கினர்.

கானவர் முன்னெடுத்த எரிபுன விவசாயம் மலைச்சரிவு விவசாயமாகவும் (Terrace Cultivation) காட்டெரிப்பு விவசாயமாகவும் (Slash and burn cultivation), இடம் பெயரும் விவசாயமாகவும் (Shifting Cultivation) அமைந்தது. பண்பாட்டுப் படிமலர்ச்சியில் பழைய நிலையும் தொடர்ந்து கொண்டிருக்கும் என்பதால் இதற்கு முந்தைய 'வேட்டையாடி உணவு சேகரித்தல்' நிலையையும் கானவர்கள் கொண்டிருந்தனர். இந்நிலையில் இவர்கள் சற்று மேம்பட்ட வகையில் 'கலப்புப் பொருளாதாரம்' (Mixed Economy) சார்ந்த சூழலை உருவாக்கிக் கொண்டார்கள். இது அவர்களின் வாழ்வாதாரத்தை மேலும் வலுப்படுத்தியது" என்பர் (Bhakthavatsala Bharathi, 2020) இவ்வகையில் குறிஞ்சி நிலச் சமூகமே தொன்மை வாழ்வியலை தன்னகம் கொண்டதோடு மட்டுமல்லாது மாற்றுப் பொருளாதாரத் தன்மைக்கும் முன்னோடியாக இருந்துள்ளமையைக் காட்டுகின்றது.

## நிலம் பண்படுத்துதல்

மனித வளர்ச்சியின் மிக முற்பட்ட நிலைகளில் வேட்டைத் தொழிலே மேலோங்கி இருந்தது. அதன் பொருட்டு, கால்நடைகளை மேய்த்தல், அதனை உழவுக்குப் பயன்படுத்துதல் என்று தொழில்கள் வளர்ச்சி பெறத்தொடங்கின. சங்க காலத்தில் உழவே தலைமையான தொழிலாக விளங்கிற்று. வேளாண் தொழிலில் விதை விதைப்பதற்கு முன் நிலத்தினை பண்படுத்தி உழுது விதை விதைப்பர். ஆக உணவு உற்பத்தித் தொழிலான வேளாண்தொழிலுக்கு நிலமே அடிப்படை. இந்நிலப்பகுதி மரங்கள் நிறைந்த மலைப்பகுதியாக இருக்கும் சூழலில் குறிஞ்சி நில மக்கள் அந்நிலத்தை வேளாண் தொழில் செய்வதற்கு ஏற்ப பண்படுத்தத் தொடங்கினர். இதனை,

மாஅங் கொன்ற மரஞ்சுட்டிய வில்

நறையகில் வயங்கிய நளிபுன நறும்புகை

உறையுறு மகளிர் மையிற் போகிச்

சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்

என்னும் பாடல்வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). மலைப்பகுதிகளில் உள்ள அகில், சந்தனம், மா ஆகிய மரங்களை வெட்டிச் சுட்டனர். இதனால் நறும்புகை மேகத்தைப் போல எழுந்தது. இவ்வாறு மரங்கள் நீக்கிய நிலத்தை விதை விதைப்பதற்கு ஏற்பப் பண்படுத்தினர். "காட்டெரிப்பு வேளாண்மையில் ஈடுபட்ட கானவர்கள் கண்டறிந்த ஒரு தொழில்நுட்பம் நம்மைக் கவர்கிறது. இந்த மலை விவசாயத்தில் காட்டழிப்பும் எரியூட்டலும் மண்ணின் மேற்பரப்பில் கூடுதலான சூட்டை ஏற்படுத்துகின்றன. இது மண்ணின் அடி ஆழத்தில் உள்ள கனிமங்களைச் சூடாக்கி மேற்பரப்புக்குக் கொண்டு வர உதவுகின்றன. மேலும் எரிக்கப்பட்ட மரங்களின் சாம்பல் தரும் நைட்ரஜன் மண்வளத்தைக் கூட்டுகிறது. சங்க இலக்கியங்கள் இவ்வகை இடத்தைத் 'தினைப்புனம்' என்கிறது" (Bhakthavatsala Bharathi, 2005) பண்டைத் தமிழர் மேற்கண்ட விவசாய முறைகளை மானிடவியல் ரீதியாக உலக அளவிலான விவசாய முறைகளோடு இணைத்துக் காணமுடிகிறது. "பொதுவாகக் களிமண் கலந்த கெட்டியான மண் உள்ள மலைகளில் இந்த விவசாய முறை பரவவில்லை. இலகுவான. மணற்பாங்குடைய மலைகளில் இவ்விவசாயம் ஏற்பட்டது. இந்த விவசாய முறையில் மலைப்பகுதிகளில் உள்ள காடுகளும் புதர்களும் வெட்டப்பட்டு அவை காய்ந்த பின்னர் தீயிட்டு எரிக்கப்பட்டன. அந்த இடத்தில் குத்துக்கம்பு, தோண்டுகழி, களைக்கொட்டு போன்ற கருவிகள் மூலம் குழியிட்டு விதைகள் நடப்பட்டன. தொடர்ந்து நான்கைந்து ஆண்டுகள் இப்பகுதியில் பயிரிடப்பட்டது. அதன் பின்னர் அங்கு விளைச்சல் குன்றி விடும். அதனால் வேறு ஒரு பகுதியிலுள்ள காட்டை வெட்டி எரித்து அங்கு பயிரிடப்பட்டது." இம்முறைமைகளில் குறிஞ்சி நிலத்தில் காட்டெரிப்பு வேளாண்மை பெரும்பான்மையாகவும், இடம்பெயரும் வேளாண்மை சிறுபான்மையாகவும் நடைபெற்றமையைக் காணமுடிகிறது. இன்றைய வேளாண்மரபினர் விவசாய நிலப்பகுதியை விளைவிக்கும் தன்மைக்கேற்ப நன்செய், புன்செய் என்று வழங்கி வருகின்றனர். ஆனால், சங்க காலச் சமூகத்தில் குறிஞ்சி நிலத்துப் புன்செய் நிலத்தைத் 'துடவை' என்றும், மரங்களை அழித்து

விளை நிலமாக்கப்படும் புதிய நிலத்தை 'முதை' என்றும் பழமையான விளை நிலத்தை 'முதைபுனம்' என்றும், குறித்தமையைக் காணமுடிகிறது (Aravendan, 2016).

குறிஞ்சி நில மக்கள் தங்கள் நில இயல்பிற்கேற்ப அவற்றை பண்படுத்தி உணவு உற்பத்தியில் ஈடுபட்டமையை சங்கப் பாக்கள் கூறுகின்றன. இவற்றை, மானிடவியல் புரிதலில் நோக்குகையில் "மனிதர்கள் உணவிற்கான ஆதாரத்தை ஈட்டிய முறையில் அடிப்படையில் உணவு சேகரித்தல், உணவு உற்பத்தி ஆகிய இரண்டு முக்கிய கட்டங்கள் ஏற்பட்டன.

உணவு சேகரித்தல் (Food Collection)

1. வேட்டையாடுதல் (Hunting)
2. காய், கனி, பட்டை, கொட்டை, கிழங்கு, தேன் போன்ற இன்னும் பிற காட்டுப் பொருள்களைச் சேகரித்தல் (Gathering)
3. மீன் பிடித்தல் (Fishing)
4. உணவு உற்பத்தி (Food Production)
5. ஆயர் வாழ்வு (Pastoralism)
6. காட்டெரிப்பு வேளாண்மை (Slash and Burn Agriculture/Swidden Cultivation)
7. தோட்டப் பயிர் வேளாண்மை (Horticulture)
8. நீர்ப்பாசன வேளாண்மை (Irrigation Agriculture)

மானிடவியலில் புதிய படிமலர்ச்சிச் சிந்தனையாளர்கள் (Neo evolutionists) மக்கள் எவ்வாறு உற்பத்தி உறவில் இணைகிறார்கள். அவர்கள் பயன்படுத்துகின்ற தொழில்நுட்ப முறை எவ்வாறுள்ளது, அவர்கள் வாழ்கின்ற சுற்றுச்சூழல் முறை யாது ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு அவற்றின் அடிப்படையில் படிமலர்ச்சி நிலைகளை முன்வைத்தனர்" என அறியமுடிகிறது (Bhakthavatsala Bharathi, 2005) இவ்வாறு மானிடவியலார் செய்த படிமலர்ச்சியில் குறிஞ்சி நிலச் சமூகம் தொடக்கத்தில் வேட்டையாடியும், காடுபடு பொருள்களை சேகரித்தும் வாழ்ந்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக காட்டெரிப்பு வன்புல வேளாண்மையின் மூலம் உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

## வித்திடுதல்

குறிஞ்சி நில மக்கள் பண்படுத்தப்பட்ட நிலத்தை மண்வெட்டி கொண்டு கொத்தி அவ்விடத்தில் விதை விதைத்தனர். இம்முறையைத்தான் தோண்டுகழி கொண்டு விதைத்தல் என்பர். இம்முறைமை பழங்குடிச் சமூகத்தில் இருப்பதை இரா. முருகன் "மலையாளிப் பழங்குடிகளின் முக்கியத் தொழில் வேளாண்மை, வரகு, கம்பு, சாமை, தினை முதலியவற்றையும் பயிரிடுகின்றனர். உழுது பயிர் செய்யும் காட்டை 'உழவுக்காடு' என்றும் காடுகளை அழித்து மண்வெட்டியால் கொத்திப் பயிர் செய்யும் காடுகளை 'கொத்துக்காடு' என்றும் கூறுகின்ற இவர்கள் இடம்பெயரும் வேளாண்மை மேற்கொண்டுள்ளனர்" என்பர் (2003:94-95). இவ்வாறு நிலத்தைக் கிளரி விதை நடும் முறையை தோண்டுகழி விவசாயம், கொத்துக்காடு விவசாயம் என்று பெயர் விளங்கியமையைக் காணமுடிகிறது. தொடக்கத்தில் வேட்டைத் தொழிலைச் செய்த குறிஞ்சி நில மக்கள் வேளாண்மையில் இம்முறைமையை மேற்கொண்டதை

மரங்கொல் கானவன் புனர்ந்துளர்ந்து வித்திய

பிறங்கு குர லிறடி காக்கும் புறந்தாழ்

என்னும் பாடல்வரிகள் விளக்குகின்றன (Aravendan, 2016). இம்மக்கள் உழு கருவிகள் கொண்டு மண்ணை உழவில்லை, 'துளர்' எனப்படுகிற மண்வெட்டி கொண்டு மண்களை கிளரி விதை விதைத்துள்ளனர். இம்முறையையே, வேளாண்மையின் தொடக்க நிலையாக இருந்திருக்கக்கூடும் எனக் கருதமுடிகிறது. இத்தொடக்கம் குறிஞ்சி நிலத்தில் நிகழ்ந்தமையை இங்கு காணமுடிகிறது. இத்துளர் என்னும் கருவியே பழங்குடிச் சமூகத்தில் 'தோண்டுகழி' என்று வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதனை, "காட்டெரிப்பு வேளாண்மையின் உருவாக்கத்தினால், புதிய தொழிற்கருவிகள் ஏற்பட்டன. குறிப்பாக விதைகள் நடுவதற்குப் பெண்கள் பயன்படுத்திய 'தோண்டு கழி' மிக முக்கிய கருவியாகும். இக்கருவிகள் கூரான நடுப்பகுதி பூமியில் விதை ஊனுவதற்குக் குழிபோட உதவியது. இந்தக் கூரான நடுபகுதிக்கு

இருபக்கத்திலும், சற்று வளைந்த, கூர்மையான முனைகள் களை எடுக்கவும், மண்ணைக் கிளறவும் உதவின. மண்ணுக்கடியில் உள்ள கிழங்குகளை அகழ்ந்தெடுக்கவும் உதவின. ஆகவே, ஆதி விவசாயி பெண்களே ஆவர். இவர்கள் பயன்படுத்திய இத்தோண்டு கழியே முதல் விவசாயக் கருவியாகும். இக்கருவியைக் கொண்டே பெண்கள் தினைப்புனம் காவல் காக்கவும் செய்தனர். இதுவே, பின்னாளில் தாய்த் தெய்வங்களின் சூலாயுதமாகவும் படிமலர்ச்சி பெற்றது" (Bhakthavatsala Bharathi, 2007) மனிதகுலத்தில் தோன்றிய முதல் விவசாயக் கருவியாகிய தோண்டு கழி சங்க இலக்கியத்தில் காணப்படுவது ஒரு வியப்புக்குரிய பதிவு.

இரும்புத் தலையாத்தி திருந்துகளை விழுக்கோல்

உளிவாய்ச் சுரையின் மிளிரமிண்டி (பெரும்பாண்:91 - 92)

எனும் அடிகள் மிக முக்கியமானவையாகும். இந்தக் கருவியின் நுனிப்பகுதி பூண் போன்று இரும்பால் செருகப்பட்டிருந்தது. இது அடுத்தடுத்த கால வளர்ச்சியைக் காட்டுவதாகும். இரும்பு முனைக்கு முன்னர் அதன் நுனிப்பகுதி இயல்பான மரமாகவே இருந்திருக்கும். "இக்கருவி இன்றைய பழங்குடிகளிடம் காணப்படுகிறது. இதனை காடர் பழங்குடியினர் 'பாறைக்கோல்' எனவும், தேன்குறும்பர்கள் 'குழிக்கோல்எனவும், பளியர்கள் 'காம்பு' எனவும், காணிக்காரர் 'தொட்டகாம்பு' எனவும் கொண்ட ரெட்டிகள் 'கொங்கி பொரிகி' எனவும் குறிப்பிடுகின்றனர்" என்பர் பக்தவத்சலபாரதி (2020 :44). இம்முறையே, வேளாண் தொழிலின் தொடக்கமாக குறிஞ்சி நிலச் சமூகத்தினரே இருந்துள்ளனர். இவர்கள் அருவிகள் பரந்துள்ள மலைப் பக்கங்களிலே நெல்லை விதைத்தனர். இது மலைநெல் என்று அழைக்கப்பட்டது. இதனை,

அருவிப் பரப்பி னைவனம் வித்திப்

என்னும் பாடல் வரி கூறுகின்றது (Aravendan, 2016). இவ்வாறு வித்திடுவதற்குரிய விதைகளை குறிஞ்சி நில குறவர் இன மக்கள் தாங்கள் முன்பு அறுவடை செய்து வைத்திருந்ததிலிருந்து எடுத்து வைத்து, பின் அதனை பயன்படுத்தி வந்தனர் என்பதை,

பரீஇ வித்திய வேனற்

குரீஇ யோப்புவாள் பெருமழைக் கண்ணே

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன (Aravendan, 2016). குறிஞ்சி நில மக்களுக்கு விதை நெல் உருவாக்கும் முறையை தெரிந்து வைத்துள்ளனர். வேளாண்மையின் தொடக்கமாக குறிஞ்சி நிலம் இருந்தாலும், அம்மக்கள் இத்தொழிலுக்கானக் கூறுகளை தெளிவான முறையில் அறிந்து வைத்துள்ளனர். விதைத்த விதைகளை அருவி நீர் கொண்டு விளைவித்தனர் என்பதை,

மைபடு சிலம்பி னைவனம் வித்தி

அருவியின் விளைக்கு நாட னொடு

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகின்றன (Aravendan, 2016). இத்திணைகள் வளர்வதற்கு இடையூறாக களை போன்றிருந்த சிறு புழுக்களை குறவர் இனப் பெண்கள் நீக்கினர் என்பதை

நெடுவரைச் சேறி யாயிற்

கடவை மிடைந்த துடவையஞ் சிறுதினைத்

துளிரெறி நுண்டு கட் களைஞர் தங்கை

தமராற் றீராள் என்மோ

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன (Aravendan, 2016). பெரிய மலையிடத்து நெருங்கி புனங்களிலுள்ள சிறு தினையின் இளந்தளிர்களை அரிக்குஞ் சிறு புழு முதலிய பகையைக் களைந்து தினையை விளைவிப்பவராகிய குறவரின் தங்கையாகிய நங்கை இருந்தனர். இவ்வித தினைகளை மலைச் சாரலிடத்துள்ள பெரிய புனங்களில் சிறு தினையை விளைவித்ததோடு அதனருகில் அவரைக் கொடிகளையும் பயிரிட்டுள்ளனர் என்பதை

சாரற்

பெரும்புனக் குறவன் சிறுதினை மருகாற்

கொழுங்கொடி யவரை பூக்கும்

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). குறிஞ்சி நில மக்கள் ஊடு பயிர் விளைவிக்கும் முறைமையை அறிந்து வைத்துள்ளனர் என்று அறியமுடிகிறது.

## தினைப்புனம் காத்தல்

தினைகள் விளைகின்ற இடத்திற்கு புனம் என்றனர் குறிஞ்சி நிலத்தினர். இச்சொல்லாடல் குறித்த பதிவை பல பாடல்களில் காணமுடிகிறது. தினைகள் வளர்ந்து முற்றிய சூழலில் பறவை விலங்குகளிடமிருந்து காத்து வந்தனர். இச்செயலில் குறிஞ்சி நில குறவர் இன ஆடவரும், மகளிரும் ஈடுபட்டுள்ளனர். "புன்செய் வேளாண்மையில் காவல் மிகுதியும் வேண்டப்படுகின்றது. இந்தக் காவலும் பகற்காவல், இரவுக்காவல் என்ற இருநிலைகளில் அமைகின்றது. பகற்காவல் பெரும்பாலும் பெண்டிரால் செய்யப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. சங்க இலக்கியத்தில் தினை பற்றி வரும் எண்பது இடங்களில் ஆண், தினைக்காவல் புரிந்தமை ஆறு இடங்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. பெண்கள் தினைப் புனம் காத்தமை 29 இடங்களில் பேசப்பட்டுள்ளது. ஏனல் வரும் நாற்பத்து மூன்று இடங்களில் ஆண் காவல் எட்டு இடங்களிலும், பெண் காவல் 26 இடங்களிலும் பேசப்பட்டுள்ளன. ஆக 55 இடங்களில் பெண்கள் தினைப்புனக் காவலில் ஈடுபட்டமை பாடப்பட்டுள்ளது" (Mathaiyan, 2010) தினைக் காவலில் ஆடவரை விட பெண்டீரே மிகுதியாக ஈடுபட்டுள்ளனர். "புதிய கற்காலத்தில் இரண்டு முக்கிய புரட்சிகள் உருவாயின. புதிய கற்காலத்தில் அதுவரை பெண்கள் செய்து வந்த காடுபடு பொருள்கள் சேகரித்தலை விடுத்துத் தங்கள் குடியிருப்பைச் சுற்றி அத்தகைய பொருள்கள் கிடைப்பதற்காகப் பயிரிடத் தொடங்கினார்கள். 'பயிர் விளைவித்தல்' (domestication of plants) தோன்றிய காலகட்டம் அது. அதனால் பெண்களே முதல் விவசாயிகள் எனும் பெயரைப் பெற்றார்கள். இக்காவலை தினையின் உயரத்தைவிட சற்று உயர்வான இடத்தில் பரண்களை அமைத்து, விலங்கு, பறவைகளிடமிருந்து அத்தினையைக் காத்துள்ளனர் (Bhakthavatsala Bharathi 2020:42). இதனை,

சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி

வாஅன் மீனின் வயின்வயி னிமைக்கும்

ஏனலஞ் சிறுதினை காக்குஞ் சேணோன்

ஞெகிழியிற் பெயர்ந்த நெடுநல் யானை

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகின்றன (Aravendan, 2016). இப்பரண்களில் இராக்காலத்தில் வெளிச்சத்திற்காக கொள்ளிக்கட்டைகளைப் பயன்படுத்தியுள்ளனர். இதன் ஒளி நட்சத்திரங்கள் போல் ஒளிர்ந்துள்ளன. இவ்வொளிக்கு யானைகள் அஞ்சி சென்றமையைக் காணமுடிகிறது. இவ்விரவு நேர தினைக்காவலில் குறவர் இன ஆடவர் இருந்தமையை அறியமுடிகிறது. பகல் நேரத் தினைக் காவலுக்கு பெண்கள் சென்றனர். குறவர் இன மகளிரை, அன்னையரே அனுப்பி வைத்துள்ளனர் என்பதை,

வளைவாய்ச் சிறுகிளி விளைதினை கடியச்

செல்கென் றோளே யன்னை எனநீ

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). தினைப்புனத்திற்கு வரும் கிளிகளை தலைவி விரட்டினாள் என்பதை,

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்

புனக்கிளி கடியும் பூங்கட் பேதை

என்னும் பாடல்வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). இத்தகு தினைப்புனங்கள் அக்காலத்தில் தலைவன், தலைவி சந்திப்பிற்குரிய இடமாகவும் திகழ்ந்துள்ளது. இக்காலத்தில், தலைவன், தழல், தட்டை, அசோகந்தளிர் ஆகியவற்றை தலைவிக்கு கொடுத்துள்ளான். இப்பொருட்களுள் தழையுடையை குறிஞ்சி நில மக்கள் அணிந்துள்ளனர் என்பதை காண முடிகிறது. இதனை

தழலுந் தட்டையு முறியந் தந்திவை

ஒத்தன நினக்கெனப் பொய்த்தன கூறி

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). குறிஞ்சி நில மகளிர் கிளிகளை விரட்ட 'குளிர்' என்னும் ஒருவித கருவி பயன்படுத்தியமையை,

பிடிக்கை யன்ன பெருங்குர லேனல்

உண்கிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே

சிலம்பிற் சிலம்புஞ் சோலை

சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்

படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). குளிர் என்பது பெண்கள் கிளி ஓட்டுவதற்காக தனித்துவமாக பயன்படுத்தப்பட்ட ஒருவித கருவியாக அறிய முடிகிறது. ஆடவர்கள் கவண் என்னும் கருவியைத் தினைப்புனக் காவலில் பயன்படுத்தியமையை

யானே யீண்டை யேனே: என்னலன்

ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்

கான யானை கைவிடு பசுங்கழை

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). கவண் ஒலிக்கு காட்டு யானைகள் அஞ்சி ஓடியமையைக் காணமுடிகிறது. குறிஞ்சி நிலமக்கள் தினைபுனங் காவலில் குளிர், கவண் ஆகிய கருவிகள் பயன்படுத்தியமையை அறியமுடிகிறது. காவலுக்கான கருவிகளை உருவாக்கவும், அதனை பயன்படுத்தவும் குறிஞ்சி நிலச் சமூகத்தினர் அறிந்து வைத்துள்ளனர். "கானக்குறவர்கள் மலைப்பகுதிகளில் விவசாயம் செய்யத் தலைப்பட்டார்கள். ஆயினும், வேட்டைத் தொழிலைக் கைவிடவில்லை. இன்னும் சொல்லப்போனால் மலைகளிலும், மலைச்சரிவுகளிலும் அவர்கள் இட்ட பயிர்களை அழிக்கவந்த காட்டு விலங்குகளை வேட்டையாடினார்கள். ஆதலின் உண்மையான வேட்டை எனும் நிலையிலிருந்து மாறி விவசாயத்தைக் காப்பாற்றுவதற்கான வேட்டை என்பதாக உருமாறியது எனலாம்" (Bhakthavatsala Bharath, 2014) இவர்களது காவலைக் கடந்தும் கிளிகள் கதிரைக் கடித்துண்டதனால் கூழைப்பட்ட அடித்தட்டை சிறுமழைத் தூவலால் காயாதிருந்து பின் பெருமழை பெய்வதால் கிளைத்து தழைத்துள்ளன. இதனை,

புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்

கிளிகுறைத் துண்டகூழை யிருவி

பெரும்பெய லுண்மையி னிலையொலித் தாங்கென்

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). இவர்கள் விளைவித்த சிறுதினை நன்கு முதிர்ந்து பொன்னையொத்து இருந்தன என அறியமுடிகிறது. தினைப்பயிர் உருவாக்கத்தில் ஆடவரும் மகளிரும் இரவு பகலாக உழைத்து காத்துள்ளனர். இத்தொழிலின் பொருட்டு பற்பல புதியக் கருவிகளை நில இயல்பிற்கேற்ப கண்டறிந்து பயன்படுத்தியுள்ளனர்.

## தினை அறுவடை

விளைந்து முதிர்ந்த சிறுதினையை தொண்டகமென்னும் சிறுபறை முழக்கி குறிஞ்சி நில மக்கள் அறுவடை செய்துள்ளனர் என்பதை

சாரற்

சிறுதினை விளைந்த வியன்க ணிரும்புனத்

திரிவரி வாரிற் றொண்டாகச் சிறுபறை

என்னும் பாடல்வரி கூறுகின்றன (Aravendan, 2016). சிறுதினை விளைந்து அகன்ற சாரலிடத்துள்ள பெரிய புனங்களில் தினையை அறுப்பவருடைய தொண்டகமென்னும் சிறுபறை இரவில் ஊர்க்காவலர் யாமந்தோறும் இசைக்குந் துடியென்று மருளுமாறு இரவின் நடுயாமத்திலும் ஒலியா நிற்கும் என்பர். குறிஞ்சி நிலத்திற்குரிய சிறப்புப் பொருள்களுள் ஒன்று தொண்டகப்பறை ஆகும். துடி என்னும் கருவிக்கு இணையாக குறிக்கப்படுகிறது. இக்கருவி அறுவடைக்காலத்தில் ஒலிக்கப்பட்டமை இங்கு அறியமுடிகிறது. தினை அறுவடை இசை முழக்கத்துடன் நடந்தமையைக் காண முடிகிறது.

அறுவடைக்கு முன்பே புனத்தில் விளைந்த சிறுதினையில் ஒரு பகுதியை கடவுளுக்கென்று ஒதுக்கி காவல் காக்கும் மரபு இம்மக்களிடையே இருந்தமையை

புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்

கடியுன் கடவுட் கிட்டசில் குரல்

அறியா துண்டமஞ்ஞை யாடுமகள்

வெறியறு வனப்பின் வெய்துற்று நடுங்குஞ்

சூர்மலை நாடன்

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). புனத்துக்குரியவன் கடவுளுக்கென்று ஒதுக்கி வைத்த காவலைக் கொண்ட தோட்டத்தில் பொன் போன்று முதிர்ந்த சிறு தினையின் சில கதிர்களை அதனை அறியாது உண்ட மயில் வெறியுற்றாடும் மகளின் வனப்பை யொத்த வனப்பினதாய் அஞ்சி நடுங்கும் அச்சத்தைத் தருந் தெய்வத்தையுடைய மலை நாடு என்பர்.

விளைந்த பொருளின் ஒரு பகுதியை கடவுளுக்கு எடுத்து வைக்கும் குறிஞ்சி நில மக்களின் நம்பிக்கையை அறியமுடிகிறது. அதை அறியாது உண்ட மயிலின் நடுக்கத்தின் மூலம் இம்மக்கள் இறைவன் மீது கொண்ட அச்சத்தை காணமுடிகிறது. சங்ககால மானுடச்சமூகம் இறைவன் மீது கொண்டிருந்த மரபுசார் வழக்கங்களை குறிஞ்சி நில மக்களிடத்து காணமுடிகிறது. இம்மக்களிடத்து வெறியாட்டு நிகழ்த்தும் முறை இருந்தமையைக் காணமுடிகிறது (Subramanian, 1982).

## தினை உலர வைத்தல்

தினையை அறுவடை செய்த குறிஞ்சி நில மக்கள் அத்தினையை உண்பதற்கு ஏற்ப பக்குவப்படுத்த உலர வைத்தனர். இத்தினை உலர்த்தும் களமாக கற்பாறைகளும் குறவர் குறிச்சியின் மனையின் முன்பகுதியும் விளங்கின என்பதை,

நிரைவளை முன்கை நேரிழை மகளிர்

இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச்

சுனைபாய் சோர்விடை நோக்கிச் சினையிழந்து

பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்.

முன்றில்

தினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). இவ்வாறு தினை உலர்த்தும்போது குரங்கு, யானை ஆகியவை அத்தினையை உண்டமையைக் காணமுடிகிறது. இத்தினைகளை நன்கு பரப்பி உலர வைத்துள்ளனர். குறிஞ்சி நிலத்தின் உணவுப்பொருளான தினை மனித சமூகத்திற்கு மட்டுமின்றி விலங்கு, பறவை ஆகியவற்றிற்கான உணவாகவும் திகழ்ந்தமையைக் காணமுடிகிறது.

## தினை உணவு

குறிஞ்சி நில மக்கள் உலர வைத்தத் தினையை உணவாக சமைத்துள்ளனர். அதை சோறு என்பர். "ஒவ்வொரு தினை நிலச் சமுதாயத்திற்கும் ஒரு அடிப்படையான உணவுப் பொருள் உண்டு. தினைக் குறிஞ்சியிலும், வரகு முல்லையிலும், நெல் மருதத்திலும்; அடிப்படை உணவுப் பொருள்கள். இந்த அடிப்படை உணவுப் பொருள்கள் அந்தந்த நிலத்தின் வளக் குறியீடுகளாகக் கருதப்பட்டுள்ளன" என்பர் (Mathaiyan, 2010).

தினையால் சமைத்த சோற்றுத்திரளை குறிஞ்சி நில தெய்வமான முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்தும் போது பலியாக படைத்தமை மூலம் அறிய முடிகிறது. இதனை,

மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பரீஇச்

சொல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்கத்

முருகயர்ந்து வந்த முதுவாய் வேலன்

சினவ லோம்புமதி வினவலுடையேன்

பல்வேறு ருவிற் சில்லவிழ் மடையொடு

சிறுமறி கொன்றிவள் நறுநுதனீவி

என்னும் பாடல்வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). இத்தினைச் சோற்றை ஆட்டுகிடாவின் குருதியில் கலந்து முருகனுக்கு படைத்தமையை காணமுடிகிறது. "இரத்தம் உயிர்சக்தியின் அறிகுறி இரத்தத்தில் விதை நனைக்கப்பட்டால் வளரும் என்பது அக்கால நம்பிக்கை" (சுப்பிரமணியன், கா.1982:36). வளமையின் அடிப்படையில் தினை இரத்தத்தில் கலந்து இறைவனுக்கு படைக்கப்பட்ட குறிஞ்சி நிலச்சமூக வழக்கத்தைக் காணமுடிகிறது. தினையை உணவாக சமைத்து இறைவனுக்கு படைத்துள்ளனர். வேட்டைத் தொழில் செய்து பச்சூன் உண்ட குறிஞ்சி நில சமூகத்தினர் வேளாண் தொழில் செய்த காலத்தில் சமைத்துண்ணும் முறைமைக்கு வளர்ச்சி பெற்றுள்ளனர்.

"இனக்குழு மக்களின் இன்றியமையாத உணவு வழக்கம் வேட்டையாடுதலும், உணவு சேகரித்தலுமாகும் என்பதை மானிடவியலார் சுட்டிக்காட்டுவர். குறிஞ்சிநில உணவு வகைகள் இனக்குழு வாழ்க்கையையே பிரதிபலிக்கின்றன. ஆனால், அவர்கள் இயற்கையாகக் கிடைத்த உணவைச் சமைத்து உண்ணவும் அறிந்திருந்தனர்" என்பர் (Stephan, 2010) இக்குறிஞ்சி நிலமக்கள் தாங்கள் உருவாக்கிய தினைகள் மட்டுமின்றி குறிஞ்சி நிலத்தில் கிடைத்த விலையுயர்ந்த சந்தனம், அகில், யானைத்தந்தம் ஆகிய பொருளை விற்று அதற்கு மாறாகப் பெற்ற உணவையும் உண்டு வாழ்ந்துள்ளனர் என அறியமுடிகிறது. இது அக்காலத்தில் இருந்த பண்டமாற்று முறையைக் காட்டுகிறது. இதனை,

காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்

கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத் துண்ணும்

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன (Aravendan, 2016). சங்க காலத்தில் குறிஞ்சி நிலச் சமூகத்தினர் பண்ட மாற்று முறையில் பொருள்களை ஈட்டி உண்டுள்ளனர். உணவு உற்பத்தி முறையில் சுயமாக வேளாண் தொழிலில் ஈடுபட்டு தினை உருவாக்கியதோடு தாங்கள் வாழ்ந்த பகுதியில் கிடைக்கும் பொருள்களை பண்டமாற்றி வாழக் கற்றுள்ளனர். குறிஞ்சி நிலச்சமூகத்தினர் பண்டைக்காலத்திலே உணவு உற்பத்தி முறையை பல நிலைகளில் அறிந்துள்ளனர். உற்பத்தி செய்த உணவை சேகரித்து மறு உற்பத்தியும் செய்துள்ளனர். எனவே, உணவு சேகரிப்பையும் உணவு உற்பத்தியையும் குறிஞ்சிநில சமூகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

## முடிவுரை

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் குறிஞ்சி நில மக்கள் உணவு உற்பத்தி முறையில் சிறந்து விளங்கியமைக்கு சங்கப் பாடல்கள் சான்றுகளாகும். குறுந்தொகை குறிஞ்சி நில பாடல்களை வாசிக்கும் பொழுது பாடல்கள் பரந்து பட்டு கிடந்தாலும் அவற்றை உற்று நோக்கும்போது அப்பாடல்களுக்கு இடையே செயல் தொடர்பு உள்ளமையை காண முடிகிறது. உணவு உற்பத்தி அக்காலத்தில் இம்மக்களிடையே எவ்வாறு நிலவின என்று நோக்குகையில் அம்மக்களிடையே இருந்த சிறு சிறு கூறுகளை ஒன்றிணைத்து பார்க்கும் போது புலப்படுகிறது. இம்முறையே உணவு உற்பத்திக்கானப் படிமலர்ச்சி முறையை எடுத்துரைக்கிறது. தொடக்கம் முதல் அதாவது, நிலம் உருவாக்கி தினை விதைத்தது முதல் அதை உணவாக சமைத்து உண்டமை வரை காணமுடிகிறது. உற்பத்தி முறைக்கான அனைத்துக் கூறுகளையும் குறிஞ்சிநிலச் சமூகம் எடுத்துரைக்கிறது. ஒரு நிலத்தைப் பண்படுத்தி, விதைத்து, அறுவடை செய்து, அதனை உலர்த்தி, பண்டமாற்றி, சோறு சமைத்தமை, அதனை இறைவனுக்குப் படைத்தமை என்று அனைத்து படிமலர்ச்சித்; தன்மையையும் குறிஞ்சி நிலச்சமூகம் காட்டுகிறது. சங்க காலத்தில் குறிஞ்சி நிலச் சமூக மக்களிடையே தொல்பழங்கால வழக்கம் முதல் நாகரிக வழக்கங்கள் வரை வழக்கத்தில் இருந்தமையை, மண்ணைக் கொத்தி விதைத்தது முதல் அதனை சோறாக சமைத்து உண்டமை வரை உள்ள பதிவு வழி காணமுடிகிறது. இவை காலந்தோறும், படிப்படியாக நிகழ்ந்திருக்கலாம். ஏனெனில், சங்கப் பாடல்கள் பல்வேறு காலத்தில் எழுதப்பட்டு தொகுக்கப்பட்ட பாடல்களாகும். எனவே, சங்கப்பதிவுகள் என்பது அக்கால வரலாற்றை மட்டுமின்றி, அவற்றுக்கு முந்திய கால வரலாற்றை கூறும் பதிவையும் தன்னகத்தில் கொண்டுள்ளது. சங்ககாலத்தில் குறிஞ்சிநிலச் சமூகம் தன் ஏககாலப் பதிவை கூறுகின்றது. இதில், அச்சமூகம் உணவு உற்பத்தி, உணவுசேகரிப்பு ஆகிய முறைமைகளை தொழில்நுட்பம் ரீதியாக கையாண்ட அறிவார்ந்த ஆதி விவசாயக் குடிச்சமூகமாகும். இவ் உற்பத்தி படிமலர்ச்சி இன்று பல மாறுதலுக்கு உட்பட்டு நிலவுகிறது. இருப்பினும், இச்செயலுக்கு அடிகோலியது குறிஞ்சி நிலச் சமூகமே என்பதை சங்க இலக்கியப் பதிவுகள் தருகின்றன.

## References

Aravendan, R., (2016) Kurunthogai, New Century Book House, Chennai, Tamil Nadu, India.

Bhakthavatsala Bharathi, (2003) Cultural Anthropology, Meiyappan Padhippakam, Chitamparam, Tamil Nadu, India.

Bhakthavatsala Bharathi, (2005) Anthropological Theories, Vallinam, Podicherry, India.

Bhakthavatsala Bharathi, (2007) Tribes of Tamilnadu, Adaiyaalam, Puthanatham, Tamil Nadu, India.

Bhakthavatsala Bharathi, (2014) Literary Anthropology, Adaiyaalam, Puthanatham, Tamil Nadu, India.

Bhakthavatsala Bharathi, (2020) Ancient Tamil Culture, Adaiyaalam, Puthanatham, Tamil Nadu, India.

Mathaiyan, P., (2010) Agricultural Society in Sangam Literature, New Century Book House, Chennai, Tamil Nadu, India.

Murugan, P., (2003) Sangapakkalil Tholkudi Kurugal, Chelvi Pathipakkam, Pondicherry, India.

Stephan, G., (2010) Tholkappiyamum Inavarivial Kavithaialum, New Century Book House, Chennai, Tamil Nadu, India.

Subramanian, K., (1982) Sangakala Samuthayam, New Century Book House, Chennai, Tamil Nadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License